# அடுத்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் வளர்ச்சி புலிப் பாய்ச்சலாக இருக்கும்!

## முதல்வர் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

- ஆயிரத்து 304 கோடி ரூபாய் மதிப்பிலான 23 முடிவுற்ற பணிகளைத் தொடங்கி வைக்கும் விழா
- 309 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டும் விழா
- பல்வேறு அரசுத் துறைகள் சார்பாக 75 ஆயிரத்து 151 பயனாளிகளுக்கு 167 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா என்று முப்பெரும் விழாவாக இது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**தாமிரபரணி - கருமேனியாறு - நம்பியாறு உபரி நீர் இணைப்புத் திட்டம்!**

இந்த நிகழ்ச்சியில் மிக முக்கியமான உபரி நதி நீர் இணைப்புத் திட்டமும் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. தலைவர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, நம்முடைய மூத்த அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்களின் மேற்பார்வை யில் தொடங்ககப்பட்டு, இன்று அவர் முன்னிலையில் திறக்கப்பட்டிருக்கிறது.

தாமிரபரணி கருமேனியாறு, நம்பியாறு, உபரி நதிநீர் இணைப்புத்திட்டம் மிக மிக முக்கியமான திட்டம். இது மூலமாக, தாமிரபரணி ஆற்றின் வெள்ளநீரை 75 கிலோமீட்டர் நீளத்திற்கு கால்வாய் மூலம் வறட்சிப் பகுதிகளான திசையன்விளை மற்றும் சாத்தான்குளத்திற்குக் கொண்டு செல்ல இருக்கிறோம். இது ஒரு முன்னோடியான நதி நீர் இணைப்புத் திட்டம். இதன் திட்ட மதிப்பு ஆயிரத்து 60 கோடியே 76 இலட்சம் ரூபாய். கடந்த 2 ஆண்டுகளாக நடந்த சோதனை ஓட்டம் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து இன்றைக்கு இந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

**திருநெல்வேலி மாவட்டத்திற்கு கழக அரசின் திட்டங்கள்!**

நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு திருநெல்வேலி மாவட்டத்திற்கு என்று ஏராளமான திட்டங்கள் நிறைவேற்றித் தரப்பட்டிருக்கிறது.

- பொருநை அருங்காட்சியகத்தைப் பற்றி முதலிலேயே சொன்னேன்.
- தாழையூத்து முதல் 'கொங்கந்தான் பாறை விலக்கு' வரை திருநெல்வேலி மாநகருக்கான மேற்குப் புறவழிச்சாலை,
- அம்பாசமுத்திரம் புறவழிச்சாலை,
- தாமிரபரணி நதியை நீராதாரமாக கொண்டு 605 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர் திட்டப்பணிகள்,
- களக்காடு நகராட்சி மற்றும் 7 பேரூராட்சிகளில் இருக்கும் குடியிருப்புகளுக்கு 423 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் ஆகியவை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.
- திருநெல்வேலி மாவட்டத்தில் 2021 22 முதல் டிசம்பர் 2024 வரை 5 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் 405 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு, 115 குடியிருப்பு பகுதிகள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.
- திருநெல்வேலி மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம்
- முறப்பநாடு கூட்டுக்குடிநீர் திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது.
- மணிமுத்தாறு அணைப்பூங்கா பகுதியில் பல்லுயிர்ப் பூங்கா மற்றும் சாகச சுற்றுலாப் பூங்கா அமைக்கும் பணிகள் பரிசீலனையில் இருக்கிறது.
- திருநெல்வேலி மாநகரம் பெருமாள்புரம் பகுதியில் புதிய ஐ.டி. பூங்கா
- வள்ளியூரில் மாவட்ட தலைமை மருத்துவ மனை
- திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் ஆய்வகம்
- திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில், இதயம், நரம்பு, சிறுநீரகம் மற்றும் கல்லீரல் நோய்களுக்கான உயர்சிறப்பு மருத்துவப் பிரிவு
- அம்பாசமுத்திரத்தில் அரசு மருத்துவ மனையில் கூடுதல் கட்டடம்
- மேலப்பாளையம் அரசு மருத்துவமனையில் தாய் மற்றும் குழந்தை பராமரிப்பு பிரிவு, என்.சி.டி. பிளாக் மற்றும் டயாலிசிஸ் பிரிவு
- பாளையங்கோட்டை வட்டம், முத்தூர் கிராமத்தில் புதிய சிட்கோ தொழிற்பேட்டை
- மானூர் வட்டம் மதவக்குறிச்சியில் அரசு கலைக் கல்லூரி
- காணி பழங்குடியின மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையான விக்கிரம சிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட காரையாறு - சின்னமயிலாறு இடையே, தாமிரபரணி ஆற்றைக் கடக்க, இரும்பு பாலம் என இப்படி பல திட்டப்பணிகள் முடிக்கப் பட்டிருக்கிறது.

இன்று காலையில், தினசரி பத்திரிகையில் பல்வேறு கோரிக்கைகளை படித்துப் பார்த்தேன். செய்திகளாகப் போட்டிருக்கிறார்கள். நல்ல எண்ணத்தோடு சில பேர் போட்டிருக்கிறார்கள். கெட்ட எண்ணத்துடனும் சில பேர் போட்டிருக்கிறார்கள். அது வேறு. எந்தச் செய்தியாக இருந்தாலும் நான் படிப்பேன். அதில் தவறுவதில்லை. ஆகவே, உங்களைப் பார்ப்பதற்கு இவ்வளவு தூரம் வந்திருக்கின்ற நான் புது அறிவிப்புகளை அறிவிக்காமல் இங்கிருந்து போகமுடியுமா? நேரு அவர்கள் என்னை விட்டுவிடுவாரா?

**திருநெல்வேலி மாவட்டத்தின் எதிர்காலத் தொழில் வளர்ச்சிக்கு 'சிப்காட்' தொழில் பூங்கா!**

- நெல்லை சீமைக்கான முதல் அறிவிப்பு - திருநெல்வேலி மாவட்டத்தின் எதிர்கால தொழில் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, நாங்குநேரி வட்டம், மறுகால்குறிச்சி மற்றும் திருவரமங்கை புரம் கிராமங்களில், 2 ஆயிரத்து 291 ஏக்கர் பரப்பளவில் புதிய 'சிப்காட்' தொழில்பூங்கா அமைக்கப்படும். அதுமட்டுமல்ல, மூலக்கரைப்பட்டி பகுதியில் இருக்கும் ஆயிரத்து 200 ஏக்கர் தரிசு நிலங்களில் மேலும் ஒரு புதிய சிப்காட் தொழில் பூங்கா அமைக்கப்படும்.
- இரண்டாவது அறிவிப்பு - திருநெல்வேலி மாநகரத்தில், மதுரை குமரி சாலையில், பாளையங்கோட்டை பேருந்து நிலையம் மற்றும் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையம் இடையே குலவணிகர் புரத்தில் இருக்கும் இரயில்வே கடவுப்பாதைக்கு மாற்றாக, புதிய Y வடிவ இரயில்வே மேம்பாலம் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.
- மூன்றாவது அறிவிப்பு - திருநெல்வேலி மாநகராட்சியில், புதிய கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு, அதிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட நீரை சிப்காட் கங்கைகொண்டான் தொழிற்சாலைகளுக்கும், மற்ற தொழில் பூங்காக்களுக்கும் பயன்படுத்த திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம், தாமிரபரணி ஆற்றில் கழிவு நீர் கலப்பதை முற்றிலும் தடுக்கவும் தொழிற்சாலை தேவைகளுக்கு சுத்தி கரிக்கப்பட்ட நீரை பயன்படுத்தவும் வழிவகை ஏற்படும்.
- நான்காவது அறிவிப்பு - பாளையங்கோட்டை அம்பாசமுத்திரம் சாலை மேலப்பாளையம் பகுதியில், 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நெடுஞ்சாலைத்துறை மூலம் நான்குவழிச் சாலையாக விரிவாக்கம் செய்யப்படும்.
- ஐந்தாவது அறிவிப்பு - அம்பாசமுத்திரம் வட்டம், அருள்மிகு பாபநாச சுவாமி திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கான பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.
- ஆறாவது அறிவிப்பு - மீனவப் பெண்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக திருநெல்வேலி மாவட்ட கடற்கரைப் பகுதியில், கடல்பொருட்கள் மதிப்புக் கூட்டல் மையம் மற்றும் உற்பத்தியாளர் நிறுவனம் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

நான் இப்போது அறிவித்த திட்டங்களுக்கு எல்லாம், விரைவில் அரசாணை வெளியிடப்பட்டு பணிகள் தொடங்கும்!

2023ஆம் ஆண்டு டிசம்பரில் எப்படிப்பட்ட கனமழை பெய்தது என்று உங்களுக்குத் தெரியும்! அதனால், திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி, தூத்துக்குடி உள்ளிட்ட தென் மாவட்டங்கள் எப்படியெல்லாம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது என்றும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த பாதிப்புகளிலிருந்து மீள, ஒன்றிய அரசிடம் நாங்கள் நிதி கேட்டோம். இரண்டு ஒன்றிய அமைச்சர்கள் வந்தார்கள்! ஆனால், அவர்கள் உடனடியாக இடைக்கால நிதி உதவியைக்கூட செய்யவில்லை. நம்முடைய நயினார் நாகேந்திரன் அவர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. அவருக்கும் உண்மை தெரியும். ஆனால், அவர் பேசமாட்டார். நீங்கள் பேசுங்கள் என்றுதான் எனக்கு அனுமதி கொடுப்பார்.

**நாம் கோரிய வெள்ள நிவாரண நிதியில் 1 விழுக்காடு கூட தராத ஒன்றிய அரசு!**

இருந்தாலும், மாநில அரசின் நிதியை வைத்து நிவாரண பணிகளை நாங்கள் செய்தோம். தொடர்ந்து ஒன்றிய அரசிடம் நிதி கேட்டு வலியுறுத்தினோம். கொடுக்காத அவர்களைக் கண்டித்தோம். அப்போதும் வரவில்லை! நாடாளுமன்றத்திலும் பேசினோம். அப்போதும் வரவில்லை! ஏன், நீதிமன்றம் சென்றோம். அதன்பிறகுதான் ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு வெள்ள நிவாரண நிதியை அறிவித்தார்கள். அதுவும் எவ்வளவு? நாம் கேட்டது, 37 ஆயிரத்து 907 கோடி ரூபாய்! வேறு வழியில்லாமல் ஒன்றிய அரசு கொடுத்தது, எவ்வளவு கொடுத்தது வெறும் 276 கோடி ரூபாய்! நாங்கள் கேட்டதில் ஒரு விழுக்காட்டைக் கூட கொடுக்கவில்லை. இப்படிதான் ஒன்றிய அரசு நடந்துகொண்டு இருக்கிறது!

சரி போகட்டும்! இந்த பட்ஜெட்டிலாவது நாங்கள் கேட்ட நிதிகளை ஒதுக்கித் தருவார்கள் என்று எதிர்பார்த்தோம். அதுவும் இல்லை! தமிழ்நாட்டிற்கு நிதியும் கிடையாது, நீதியும் கிடையாது என்று ஒதுக்கிவிட்டார்கள்! மீண்டும் மீண்டும் வஞ்சிக்கிறது, ஒன்றிய பா.ஜ.க. அரசு! அவர்களை பொருத்தவரைக்கும், கூட்டணியில் இருக்கும் மாநிலங்களுக்கும், தேர்தல் வரும் மாநிலங்களுக்கும் மட்டும்தான் அறிவிப்புகளையும் நிதியையும் கொடுப்பார்கள். அதனால்தான் நாங்கள் கேட்கிறோம். என்ன கேட்கிறோம்?

"இந்தியாவின் வரைபடத்தில் மட்டும், தமிழ்நாடு இருந்தால் போதுமா? அரசாங்கம் வெளியிடும் நிதிநிலை அறிக்கையில் இருக்க வேண்டாமா? ஒன்றிய அரசின் திட்டங்களில் தமிழ்நாட்டின் பெயர் இருக்க வேண்டாமா? தமிழ்நாட்டிற்கு சிறப்புத் திட்டங்களை அறிவிக்க வேண்டாமா? தேர்தல் நேரத்தில் வாக்கு கேட்க மட்டும் தமிழ்நாட்டிற்கு வந்தால் போதும் என்று நினைக்கிறார்களா?"

"இப்படி நாங்கள் கேட்கும் கேள்விகள் எதற்கும், பா.ஜ.க.விடம் இருந்து எந்த பதிலும் வராது.

**மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு தரும் அல்வா!**

'திருநெல்வேலி அல்வா' என்றால் உலக அளவில் புகழ்பெற்றது. ஆனால், இப்போது, மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு தரும் 'அல்வா'தான் அதைவிடப் புகழ்பெற்றதாக இருக்கிறது! நம்முடைய திராவிட மாடல் அரசைப் பொருத்தவரைக்கும் - ஒன்றிய அரசைப் பொருட்படுத்தாமல், 'நமக்கு நாமே' என்று தமிழ்நாட்டை மேம்படுத்தி வருகிறோம். அதனால்தான், ஒன்றிய அரசு வெளியிடும் எல்லாப் புள்ளிவிவரங்களிலும் முன்னணியில் இருக்கிறோம்! அதற்குக் காரணம், வாக்களித்த மக்களான உங்களுக்கு, நாங்கள் உண்மையாக இருக்கிறோம்.

**புதுப்புதுத் திட்டங்கள் - உருவாக்கிக் கொண்டே இருப்போம்!**

ஒன்றிய அரசின்மீது குறை சொல்லிக்கொண்டு எந்த திட்டத்தையும் உருவாக்காமல் விட்டுவிடவில்லை. நாளுக்கு நாள் புதுப் புதுத் திட்டங்கள், வந்து கொண்டே இருக்க்கின்றன! நாங்கள் உருவாக்கிக்கொண்டே இருப்போம்! நேற்றுகூட, கங்கைகொண்டான் சிப்காட்டில், 3800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டாடா பவர் சோலார் நிறுவனத்தைத் தொடங்கி வைத்தேன்.

அதுமட்டுமல்ல, 2574 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 'விக்ரம் சோலார்' நிறுவனத்திற்கு அடிக்கல் நாட்டியிருக்கிறேன். இதில், 'டாடா பவர் சோலார்' நிறுவனத்திற்கு, நாங்கள் ஆட்சிக்கு வந்து 4.7.2022இல்

## தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு தி.மு.க. ஆட்சி எப்போதும் பக்கபலமாக இருக்கும்!

புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டு, 20.10.2022இல் அடிக்கல் நாட்டி, நேற்று, அதாவது இரண்டே ஆண்டில் திறந்து வைத்திருக்கிறோம்! அந்த தொழிற்சாலை மூலமாக மட்டும் 4000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது.

**'அப்பா' என என்னை அழைத்து நெகிழ்ந்த பெண்!**

அதில் முக்கியமானது என்ன என்று கேட்டால், 80 சதவிகிதம் பேர் பெண்கள். அந்த நிறுவனத்திற்கு நான் சென்றபோது, அங்கிருந்த ஒரு பெண் தொழிலாளர் என்னிடம் சொன்னது, "அப்பா, எங்கள் ஊரில் எவ்வளவு பெரிய தொழிற்சாலையைக் கட்டி எங்களுக்கு வேலை கொடுத்திருக்கிறீர்கள். நன்றி" என்று அந்த மகள் சொன்னபோது நான் நெகிழ்ந்து போனேன்.

அதேபோன்று, விக்ரம் சோலார் நிறுவனத்தைப் பொருத்தவரைக்கும், கடந்த ஆட்சியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டிருந்தாலும், அதற்குப் பிறகு அவர்கள் எந்த முயற்சியும் செய்யவில்லை. அதைப்பற்றி கவலையும்படவில்லை. ஆனால், நம்முடைய அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாட்டின் சூழ்நிலையை விளக்கி, உறுதி கொடுத்து அந்த நிறுவனத்தை அழைத்து வந்திருக்கிறோம்! அதிலும், 2500 பேருக்கு வேலை கிடைக்கப் போகிறது. நான் இப்போதே சொல்கிறேன். அங்கும் பெரும்பகுதி மகளிருக்குதான் வேலைவாய்ப்பு. இப்படிச் சொல்வதால் இந்த மாவட்டத்து ஆண்களுக்கு சிறிது பொறாமை கூட வரும்.

**நாம் பார்த்துப் பார்த்து செய்திடும் மகளிர்க்கான திட்டங்கள்!**

உண்மையைச் சொன்னால், ஒரு பெண் கல்வி பெற்று பொருளாதாரச் சுதந்திரம் அடைந்தால், அந்தக் குடும்பத்தின் தலைமுறையே உயர்ந்து நிற்கும். அதனால்தான் என்னுடைய ஆட்சியில் மகளிருக்கான திட்டங்களைப் பார்த்துப் பார்த்து நாங்கள் செய்துகொண்டு வருகிறோம்.

இன்றைக்கு விவசாயிகள் பயன்கூடிய வகையில் 77 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 'மெகா உணவுப் பூங்கா'வையும் அதே சிப்காட்டில் திறந்து வைத்திருக்கிறேன். அதன் மூலம் பல ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும்! என்னுடைய இந்த ஆட்சியில், நவீன தொழில்களின் மையமாக தமிழ்நாட்டை உயர்த்தவேண்டும். சென்னை, கோவை என்று மட்டுமல்லாமல், தென் தமிழ்நாட்டில் பிரம்மாண்ட தொழிற்சாலைகள் நிறைய அமைய வேண்டும். இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு சிறந்த வேலைவாய்ப்புகளை உருவாக்கவேண்டும். இதுதான் என்னுடைய இலக்கு!

**முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் புகழை காலம் சொல்லும்!**

அதை முன்னுரிமையாகக் கொண்டுதான் திட்டங்களைத் தீட்டி, முதலீட்டாளர்களுக்கு ஊக்கம் தந்து புதிய வரலாற்றை நம்முடைய திராவிட மாடல் ஆட்சி படைத்துக்கொண்டு இருக்கிறது. படித்த இளைஞர்களுக்கு இங்கேயே நல்ல வேலை கிடைப்பதை உறுதி செய்வோம்!

"இந்தத் தென்பாண்டிச் சீமையை, தொழில் வளர்ச்சி நிறைந்த சீமையாக மாற்றியது இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சி" என்று வரும் காலம் சொல்லும்! அந்த அளவுக்கு, வலுவான அடித்தளத்தை உருவாக்கி இருக்கிறேன். உலக அளவிலான முதலீட்டாளர்களாக இருந்தாலும், இந்தியாவின் முன்னணி தொழில் நிறுவனங்களாக இருந்தாலும், அவர்களை நான் சந்தித்தால், "எங்கள் தென்மாவட்டங்களில் தொழில் தொடங்க வாருங்கள்"என்றுதான் நான் கேட்பேன்.

நான் மட்டுமல்ல, நம்முடைய அமைச்சர்களும் அதிகாரிகளும் "தென்மாவட்ட ங்களில் முதலீடு செய்ய பரிசீலனை செய்யுங்கள்"என்றுதான் வேண்டுகோள் வைத்துக்கொண்டு வருகிறார்கள். அடுத்த

5 ஆண்டுகளில் தென்மாவட்டங்களின் வளர்ச்சி 'புலிப் பாய்ச்சலாக' இருக்கும். நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் போன்ற பகுதிகளின் முகமே மாறும் அளவுக்கு முன்னேற்றமானது பிரம்மாண்டமாக இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய கனவு. அது நிச்சயம் நனவாகும்!

ஒரு பக்கம் இப்படி நாங்கள் உழைத்துக்கொண்டு இருந்தால், மற்றொரு பக்கம் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு எதிரானவர்கள் எங்கள் மீது அவதூறுகளை அள்ளி வீசுகிறார்கள். ஆட்சிக்குக் களங்கம் ஏற்படுத்துகிறார்கள். அவர்களுக்கு பதிலுக்குப் பதில் பேசி, நம்முடைய நேரத்தை நான் வீணடிக்க விரும்பவில்லை.

**விஷக் கிருமிகளின் உருட்டல்கள் காணாமல் போகும்!**

நம்முடைய நேரத்தை ஆக்கப்பூர்வமான பணிகளுக்கு செலவிடவேண்டும் என்றுதான் நினைக்கிறேன். விஷக்கிருமிகளின் அக்கப்போர் உருட்டல்கள் எல்லாம், காலப்போக்கில் காணாமல் சென்று விடும். இப்படி எத்தனையோ பேரை அரை நூற்றாண்டுக்கும் மேலான என்னுடைய அரசியல் வாழ்க்கையில் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன்.

**தமிழ்நாடும் - தமிழ்நாட்டு மக்களும் வளர வேண்டும்!**

என்னைப் பொருத்தவரைக்கும், நான் அழுத்தம் திருத்தமாகச் சொல்வது. மற்றவர்கள் போன்று, "கண்ணுக்கெட்டிய தூரம் வரை எதிரிகளே இல்லை"என்று இறுமாப்போடு பேசுபவன் இல்லை இந்த ஸ்டாலின். தோழமையில் இருப்பவர்கள் பேசினாலும் சரி. எதிர்முகாமில் இருப்பவர்கள் பேசினாலும் சரி. அன்பாகப் பேசினாலும் சரி. கோபமாக பேசினாலும் சரி. அவர்கள் பேசுவதில் நியாயம் இருந்தால் - மக்களுக்கு நன்மை இருந்தால் - அதையெல்லாம் செய்து கொடுக்கவேண்டும் என்று நினைப்பவன்தான் நான்!

நமக்கு எதிராகப் பேசிவிட்டார்களே என்று காழ்ப்புணர்வோடு நடந்துகொள்பவன் இல்லை நான். எனக்கு தமிழ்நாடும் - தமிழ்நாட்டு மக்களும் வளர வேண்டும்! அவ்வளவுதான்!

நம்முடைய வளர்ச்சியைப் பொறுத்துக்கொள்ள முடியாமல்தான், நம்முடைய ஆட்சிக்குக் களங்கம் ஏற்படுத்த சமூக வலைத்தளங்களில் ஒவ்வொரு செய்தியும் எப்படியெல்லாம் திரிக்கிறார்கள் - கருத்துருவாக்கம் செய்கிறார்கள்! அவர்களின் நோக்கம் ஒன்று தான்! திமுகவை எப்படி அழிக்கலாம்? தமிழ்நாட்டின் வளர்ச்சியை எப்படி கெடுக்கலாம்? ஏன் என்றால், அவர்களின் நீண்டகாலத் திட்டத்திற்கு தடையாக இருக்கிறது நம்முடைய திராவிட மாடல் ஆட்சிதான்! அவர்களால் இதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

**துரோகிகளை துணைக்கு அழைத்து வந்தாலும் முறியடிப்போம்!**

இந்த ஆட்சி இருப்பதால்தான், 'தமிழ்நாட்டை முன்னேற்றும் திட்டங்களை செயல்படுத்துகிறார்கள். உண்மையான வரலாற்றைத் தோண்டி எடுக்கிறார்கள். மொழியுணர்வு, கல்வி உரிமை, மாநில உரிமை என்று பேசுகிறார்கள்' என்று அவர்களுக்கு நம்மைப் பிடிக்கவில்லை!

நான் உறுதியோடு சொல்கிறேன். தமிழ்நாட்டுக்குப் பக்கபலமாக தி.மு.க. ஆட்சி எப்போதும் இருக்கும்! தி.மு.க.வுக்குப் பக்கபலமாக தமிழ்நாட்டு மக்களான நீங்களும் எப்போதும் இருப்பீர்கள்! அவர்கள் என்ன சதித் திட்டம் தீட்டி, நேரடியாக வந்தாலும் சரி - துரோகிகளை துணைக்கு அழைத்துக்கொண்டு வந்தாலும் சரி - அதை நாங்கள் நிச்சயம் முறியடிப்போம்!

**நாங்கள்தான் தமிழ்நாட்டை என்றென்றைக்கும் ஆள்வோம்!**

ஏன் என்றால் - நாங்கள் தந்தை பெரியாரின் வழிவந்தவர்கள்! பேரறிஞர் அண்ணாவின் வழி வந்தவர்கள்! தமிழினத் தலைவர் கலைஞர் வழி வந்தவர்கள்! "கொண்டிருக்கும் கொள்கையாலும்" - "செய்திருக்கும் சாதனைகளாலும்" - நாங்கள்தான் தமிழ்நாட்டை என்றென்றைக்கும் ஆள்வோம்! அதற்கு எப்போதும் உங்களுடைய துணை வேண்டும். அதற்கான ஆதரவை தொடர்ந்து நீங்கள் தர வேண்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்!

---

### விவசாயிகளின் பயிர்க் கடன், நகைக் கடன்களை முழுமையாகத் தள்ளுபடி செய்தது 'திராவிட மாடல்' அரசு என்ற

# விவரம் தெரியாமல் அரைவேக்காட்டுத்தனமாக மீண்டும் அறிக்கை விடுவதா?

## பா.ஜ.க. அண்ணாமலைக்கு - கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கடும் கண்டனம்!

சென்னை, பிப்.8-

**தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி பயிர்கடன்களை தள்ளுபடி செய்த தமிழக முதல்வர் அவர்களின் திராவிட மாடல் அரசை பாராட்ட மனமில்லாத அண்ணாமலை பேரிடர், வெள்ள நிவாரண நிதி உதவிகளை ஒன்றிய அரசிடம் இருந்து பெற்றுத் தர இயலாத நிலையில் மக்களை குழப்பி, நீலிக்கண்ணீர் வடித்து அறிக்கை வெளியிடுவதா? என்று அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-


நாளுக்கு ஒரு பிரச்சனை, வேலைக்கு ஒரு கருத்து என்று ஏதாவது திராவிட மாடல் அரசை குறை சொல்ல வேண்டும் என்ற நோக்கத்தோடு செயல்படும் தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை மீண்டும் ஒரு முறை தன் அரைவேக்காட்டுத் தனத்தை நிருப்பித்துள்ளார்.

திராவிட மாடல் அரசு இதுவரை என்ன செய்தது என்று முழு விவரங்களையும் கேட்டுக் தெரிந்துக் கொள்ளமால் இன்று கடமைக்காக ஒரு அறிக்கையினை வெளியிட்டுள்ளார். அதில் விவசாய பிரச்சனை எனத் தொடங்கி, சட்டம் ஒழுங்கு என பல்வேறு புலம்பல்களைச் சொல்லி மீண்டும் மீண்டும் தி.மு.க.வை வம்புக்கு இழுக்கிறார். குறிப்பாக திமுக தேர்தல் அறிக்கையில் சிறு, குறு விவசாயிகளின் கடன் தள்ளுபடி என்று அறிவித்ததை சுட்டிக்காட்டி அர்த்தமற்ற, அவசியமில்லாத, தொடர்பற்ற வினாவினை எழுப்பியுள்ளார்.

**விவரம் தெரியாமல் கூறுவதா?**

தளபதி அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றவுடன் தேர்தல் அறிக்கையில் அறிவிப்பு எண்.33ல் தெரிவித்துள்ள சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்றுள்ள பயிர்கடன் மற்றும் நகை கடன்களை தள்ளுபடி செய்து அவற்றிற்கு போதிய நிதியை முழுமையாக ஒதுக்கீடு செய்து அவர்கள் பெற்ற கடன்கள் முழுவதுமாக தள்ளுபடி செய்தது முதலமைச்சர் தலைமையிலான தி.மு.க அரசுதான் என்ற விவரம் கூட தெரியாமல் பா.ஜ.க. தலைவர் தெரிவித்திருப்பது மிகவும் கண்டனத்திற் குரியது.

31.01.2021 அன்று வரை கூட்டுறவு சங்கங்களின் சிறு, குறு விவசாயிகள் 16,43,347 நபர்கள் பெற்றிருந்த பயிர்கடன்கள் ரூ.12,110.74 கோடி அளவிலான தள்ளுபடிக்கான தொகையை தளபதி தலைமையிலான அரசு தமிழகத்தின் நிதிநிலை கடந்த கால அரசால் கஜானா காலி செய்த நிலையிலும் விவசாயிகள் பாதிக்கப்பட கூடாது என்ற உயரிய நோக்கத்தோடு அதற்கு நிதி ஒதுக்கி விவசாய



கடனை தள்ளுபடி செய்து விவசாய பெருங்குடி மக்களின் வாழ்கையை காப்பாற்றியது தளபதி அவர்கள் தலைமையிலான கழக அரசு தான்.

முதல்வர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின் 2021-2022-ஆம் ஆண்டில் முதல் முறையாக ரூ.10,635.37 கோடி பயிர் கடன்களை 15,44,679 விவசாயிகளுக்கு வழங்கியது.

31.03.2025 வரை நான்கு ஆண்டு காலத்தில் ரூ.61007.65 கோடி பயிர் கடன்களை 79,18,350 விவாசய பெருமக்களுக்கு கடனாக வழங்கியுள்ளது. விவசாய பெருமக்களை ஊக்குவிக்கும் விதமாக பயிர்கடன்களை குறிப்பிட்ட காலத்திற்குள் முறையாக திருப்பி செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியை தமிழக அரசே செலுத்தி வருகிறது.

**பயிர்க்கடன் அதிகமாக வழங்கப்பட்டுள்ளது!**

ஒவ்வொரு ஆண்டும் நபார்டு வங்கி கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் விவசாய கடன்களுக்கு மறு நிதி அளிக்கும். ஆனால், தற்போது ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நபார்டு வங்கி கடந்த காலத்தில் மறு நிதி அளிப்பதை வெகுவாக குறைத்த போதிலும் தமிழக அரசு கூட்டுறவு வங்கிகள் மூலமாக விவசாயிகளுக்கு கடன் அதிக அளவில் வழங்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக தமிழக நிதியை வழங்கி எப்பொழுதும் இல்லாத அளவில் பயிர்கடன்கள் அதிக அளவில் விவசாய பெருமக்களுக்கு இவ்வரசு வழங்கி வருகிறது.

கூட்டுறவுத்துறையில் கடன்கள் வழங்குவது மட்டுமின்றி பல்வேறு விதமான சேவைகளை வழங்கி சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழகம் முழுவதும் பொதுவிநியோகத் திட்டம் மூலமாக 34,793 நியாய விலைக்கடைகள் மூலம் அத்தியாவசிய பொருட்களை தமிழக மக்களுக்கு கூட்டுறவுத்துறை கொண்டு சேர்க்கிறது. மேலும், புயல், வெள்ளம் போன்ற நெருக்கடியான காலக்கட்டங்களில் அவர்களுக்கான நிவாரணம் மற்றும் பண்டிகை காலங்களில் சிறப்பு தொகுப்புகளையும் பொது மக்களுக்கு கொண்டு சேர்ப்பது கூட்டுறவுத் துறை.

**மானிய விலையில் உரம்!**

கிராமபுற மக்கள் பயன் பெறும் வகையில் கடன் திட்டங்களையும், சேமிப்புகளை ஊக்குவிக்கின்ற வகையில் சிறந்த சேமிப்பு திட்டங்களையும் கூட்டுறவு வங்கிகள் வழங்கி வருகிறது. நடுத்தர மக்கள் பயன்பெறும் வகையில் குறைந்த விலையில் மருந்துப் பொருட்கள் கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் வழங்கப்படுகிறது. இத்துறையின் மூலம் கிராமப்புற மக்கள் பயன்பெறும் வகையில் இசேவை மையங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

விவசாயிகள் விவசாயத்திற்கு பயன்படுத்தும் வகையில் உரம் மற்றும் விதைகள் போன்றவை தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மூலம் மானிய விலையில் தரமானதாகவும் வழங்கி வருகிறது. மேலும், மேற்கண்ட பல்வேறு சேவைகளை தமிழக முதல்வர் அவர்களின் ஆலோசனையின் படி கூட்டுறவுத் துறை சிறப்பாக செய்து வருகிறது.

புயல், வெள்ளம் போன்ற இயற்கை சீற்றக் காலங்களில் மக்களுக்கு வழங்க வேண்டிய நிவாரண உதவிகள் எதையும் ஒன்றிய அரசிடமிருந்து பெற்றுத் தராமல் அண்ணாமலை சிறுபிள்ளைத் தனமாக அரைவேக்காடு அறிக்கையினை விடுத்து தான் குழம்புவது மட்டுமல்லாமல், மக்களையும் குழப்பும் நோக்கத்தோடு செயல்படும் பா.ஜ.க மாநில தலைவரின் செயல்பாட்டிற்கு கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.